லங்கா சோல்ட் லிமிடட் - 2024
---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 மறுப்பு அபிப்பிராயம்

லங்கா சோல்ட் லிமிடட்டின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தகிதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திறகான அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் கம்பனியை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
கம்பனியை நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கம்பனியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	கம்பனியின் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சிறிய மற்றும் மத்திய அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் சிறிய மற்றும் மத்திய அளவிலான நிறுவனங்களை அடையாளம் காணும் வரையறைகள் லங்கா சோல்ட் லிமிடட்டினால் திருப்தி செய்யப்படாததனால் கம்பனியின் நிதிகூற்றுக்களைத் தயாரித்தலானது முறையான நிதி அறிகையிடல் நியமங்களுக்கு இணங்கியிருக்கவில்லை.	சிறிய மற்றும் மத்திய அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுவதற்கு தடை இல்லை என தனியார் கணக்காய்வு நிறுவனம் கூறியுள்ளது. இது தொடர்பாக பணிப்பாளர் சபையுடன் கலந்துரையாடப்படும்.	அடுத்துவரும் ஆண்டுகளுக்காக கம்பனி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்தரும் ஆயுள்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் கம்பனியால மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து முடிவடைந்த ரூபா 313,464,630 கிரயமான	நிலையான சொத்துக்களின் மெய்மையாய்வுக் கணக்காய்வு இன்னும் முடிவடையவில்லை.	நியமத்தின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களின் பயன்தரும் ஆயுள் காலத்தினை வருடாந்தம் மீளாய்வு செய்து நிதிக்கூற்றுக்களில் தேவையான

	நடைமுறையற்ற சொத்துக்களுக்கு மத்தியில் இன்னும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை அடையாளங்கண்டு அவற்றின் பயன்தரும் ஆயுட்காலத்தினை சரியாக மீளாய்வு செய்து அடையாளங்காணப்பட்ட மதிப்பீட்டுத் தவறினை இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் திருத்தம் செய்து சரியான இயலளவுப் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		செம்மையாக்கல்கள் செய்தல் வேண்டும்.
(இ)	இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 10 ஆம் பந்தியின் பிரகாரம் முகாமைத்துவ தீர்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டு கம்பனியின் நிகழத்தக்க பொறுப்புக்களை அடையாளங்கண்டு நியமத்தின் 86 ஆம் பந்தியின் பிரகாரம் அவற்றினை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கம்பனிக்கு எதிராக ஒப்படைக்கப்பட்டிருந்த வழக்குக்குரிய நிகழத்தக்க பொறுப்புக்களை அடையாளங்கண்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வெளிப்படுத்துவதற்கு இணங்கிக் கொள்ளப்படுகின்றது.	வழக்கிற்குரிய நிகழ்த்தக்க பொறுப்புக்களை அடையாளங்கண்டு நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்படுதல் வேண்டும்.
(ஈ)	மீய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டின் போது தென்னைப் பயிர்ச் செய்கைக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 16,980,468 செலவுகள் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 41 இற்கு இணக்கமற்ற வகையில் ஆண்டிற்கான வருமான செலவாக அடையாளங் காணப்பட்டிருந்ததனால் அத்தொகையால் ஆண்டிற்கான சொத்துக்களின் பெறுமதியும் இலாபமும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	சொத்துக்களின் நியாயப் பெறுமதியை மிகைத்துள்ளதனால் மீண்டுவரும் செலவுகளை மூலதனமாக்க முடியாது.	முழுச் செலவுகளையும் உயிரியல் சொத்துக்களாக அடையாளம் காண்தல் வேண்டும்.
(உ)	உயிரியல் சொத்துக்கள் சம்பந்தமாக இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 41 இன் பிரகாரம் சேதப் பெறுமதிக்காக செம்மையாக்கல் செய்து சரியான இயலளவுப் பெறுமதிக்கு சமர்ப்பிக்கப்படாது மஹலேவாயவில் இருக்கின்ற வளர்ந்த மற்றும் வளர்ச்சியடையாத ஒரு தென்னை மரம் ரூபா 12,500 கிரயத்திற்கு புந்தல லேவாயாவில் உள்ள வளர்ந்த மற்றும் வளர்ச்சியடையாத ஒரு தென்னை மரம் ரூபா 61,313 வீதமான கிரயத்திற்கு பெறுமதியிடப்பட்டிருந்தது. அவ்வாறே மேலே உள்ள கிரயத்தின் அடிப்படையில் வளர்ந்த 443 தென்னை மரங்கள் மற்றும் வளர்ச்சியடையாத 262 தென்னை	தென்னைப் பயிர்ச் செய்கைக்குரிய கணக்கீட்டு பதிவுகளுக்கு இன்னும் விபரங்களை உள்ளடக்குவதற்கு இணங்கி கொள்ளப்படுகின்றது.	உயிரியல் சொத்துக்களுக்குரிய நியமங்களின் பிரகாரம் சேதமடைதல் பரீட்சிப்புக்களை மேற்கொண்டு சேதமடைதல் நட்டங்கள் உருவாகியிருக்குமாயின் சரியான பெறுமதியை செம்மையாக்கி சரியான பெறுமதியை கணக்கீடு செய்தல் வேண்டும்.

நாற்றுக்களை பெறுமதியிட்டு கணக்கீடு செய்யும் போது ரூபா 5,467,793 குறைத்து கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வணிக மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 26,132,083 மொத்த பெறுமதியான 01 ஆண்டிலிருந்து 04 ஆண்டுகள் வரையான காலம் அறவீடு செய்யப்படாது காணப்பட்டிருந்தும் அதற்காக நட்டத்திற்கான பரீட்சிப்புக்களை மேற்கொண்டு தேவையான ஒதுக்கீடுகள் கணக்குகளில் செய்யப்பட்டிருக்க்வில்லை.	இன்னும் விசாரணைகள் செய்யப்பட வேண்டியுள்ளதுடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நட்டப் பரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்கு தெளிவான காரணம் இருப்பதனால் அவ்வாறான மீதிகளுக்காக நட்டப் பரீட்சிப்பினை மேற்கொண்டு நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டியதுடன் கடன் மீதிகளை உரிய காலத்தில் அறவீடு செய்யாமை சம்பந்தமாக உரிய பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	வருமான ஒதுக்கமாக முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 4,966,100 ஆன மீள்மதிப்பு ஒதுக்கம் முன்னைய ஆண்டின் போது நிறுத்திவைத்த உழைப்புக்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் அந்த தவறு சரிசெய்யப்படாததனால், நிறுத்தி வைத்த உழைப்புக்கள் ரூபா 4,966,100 அதிகரித்தும் மீள்மதிப்பு ஒதுக்கம் அத்தொகையால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.	அடுத்துவரும் ஆண்டின் போது மீண்டும் முன்பிருந்த முறைமைக்கு மாற்றுவதற்கு இணங்கி கொள்ளப்படுகின்றது.	உரிய பெறுமதியை நிறுத்திவைத்த உழைப்புக்களிலிருந்து மீள்மதிப்பு ஒதுக்கத்திற்கு மாற்றி கணக்குகளை சரிசெய்தல் வேண்டும்.
(இ)	கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட கம்பனியன் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்த நிலையான வைப்பு முதலீடு மற்றும் நிலையான வைப்பு வட்டி பெறுவனவுகளின் மொத்தம் ரூபா 434,218,662 மிகையாக காட்டப்பட்டிருந்ததுடன் செயற்பாட்டு	சரியாக செம்மையாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றின் வித்தியாசங்களை தேடிக்கண்டு பிடிக்க முடியாது எனவும் அடுத்துவரும் ஆண்டிலிருந்து இன்னும் விபரமாக சமர்ப்பிப்பதற்கு	காசுப்பாய்ச்சல் கூற்றானது ஏனைய நிதிக்கூற்று மீதிகளை அடிப்படையாகக் கொண்டு சரியாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் இணக்கமின்மைகளை சரிசெய்வதற்கு

	நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்த வருமான வரி மற்றும் பங்கிலாப கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 38,892,627 குறைத்து காட்டப்பட்டிருந்தது.	இணங்கிக் கொள்வதாகவும் தெரிவிக்கிறேன்.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டின் இறுதி இருப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள Common Salt இன் பெறுமதியானது உப்பு அட்டிகளின் அளவிற்கு இணங்க அளவீடு செய்யும் போது ரூபா 2,484,094 மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	இறுதிக் கணக்கறிக்கைகளை தயாரிக்கும் போது இருப்பு பெறுமதியாக மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் விஞ்ஞான ரீதியான நடைமுறையில் கணிப்பீடு செய்யப்பட்ட இருப்பு பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டதுடன் கணக்குகளை தயாரிக்கும் சந்தர்ப்பம் வரை அந்த இருப்பு பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்காததனால் செம்மையாக்கல் செய்ய வேண்டிய தேவை இல்லை.	ஆண்டிற்கான இறுதி இருப்பினை சரியாக மதிப்பிட்டு கணக்கீடு செய்தல் வேண்டும்.
(உ)	2025 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் பூர்த்திசெய்யாத உப்பாக காணப்பட்ட ரூபா 47,498,405 இருப்பு 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் காணப்பட்ட பாதகமான வானிலை நிலைமையின் அடிப்படையில் அந்த இருப்பினை மேலும் ஒழுங்குபடுத்துவதற்கு முடியாது இருந்ததனால் பூர்த்திசெய்யாத இருப்பு மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததன் மூலம் கம்பனியின் இலாபமும் அத்தொகையால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது..	கொள்கைக்கு இணங்க செயற்படுத்தப்பட்டு வருகின்ற செயற்பாடுகள் (WIP) சரியானதாகும்.	ஐந்தொகை திகதிக்குப் பின்னைய சம்பவமாக அடையாளங்கண்டு செம்மையாக்கப்படுதல் வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நடைமுறையற்ற சொத்தக்களின் கீழ் நிர்மாண வேலையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,941,786 ஆன நிர்மாண வேலைகள் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் அவை உரிய சொத்துக்கள் தொகுதிக்கு மாற்றப்பட்டிருக்காததுடன் அது தொடர்பான பெறுமாத் தேய்வும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	நிர்மாண வேலைகள் முடிவடைந்திருக்கவில்லை.	மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்த இந்த நிர்மாண வேலைகளை உரிய சொத்துக்கள் தொகுதிக்கு மாற்றி பெறுமானத் தேய்வு செய்தலையும் ஆரம்பித்தல் வேண்டும்.
(எ)	கட்டிட சொத்துக்கள் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ள நீர்வழங்கல் முறைமையில் (Water Supply Scheme) நிரந்தரமாக ஒதுக்கீடு செய்து அடையாளங்காணக்கூடிய ரூபா 1,174,921 ஆன 101 பிளாஸ்ரிக் நீர்த்தாங்கிகள்	சொத்துக்களின் மெய்மையாய்வின் பின்னர் சரிசெய்வதற்கு இணங்கி கொள்ளப்படுகின்றது.	கட்டிட சொத்துக்களின் கீழ் சார்ந்திருக்காத இச்சொத்துக்களை தனியான சொத்துக்கள் தொகுதியாக அடையாளங்கண்டு

	மற்றும் ரூபா 253,725 ஆன 04 பவுஸர் தாங்கிகள் என்பன உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அவற்றினை தனியான ஒரு சொத்து தொகுதியாக அது தொடர்பான வீதத்தின் கீழ் பெறுமானத் தேய்வு செய்யப்படாது கட்டிட பெறுமானத் தேய்வு வீதத்தின் கீழ் ஒரு ஆண்டிற்கு 2.5 சதவீத படியாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது.		அதற்கிணங்க பெறுமானத் தேய்வு செய்யப்படுதல் வேண்டும்.
(ஏ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு நடைமுறையற்ற சொத்தக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த நிர்மாணிக்கப்பட்டு வரும் சொத்துக்களின் பெறுமதி ரூபா 18,297,580 ஆக இருந்த போதிலும் அந்த நிர்மாண வேலைகளுக்குரிய தொழில் அட்டைகளைப் பரீட்சித்த போது 05 நிர்மாண வேலைகள் தொடர்பான கிரயம் ரூபா 2,528,037 மிகையாகவும் 03 நிர்மாண வேலைகள் தொடர்பான கிரயம் ரூபா 449,226 குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	உள்ளபடியான பெறுமதி தொழில் அட்டடைகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.	நிர்மாண வேலைகளுக்குரிய மூல ஆவணங்களில் பதியப்பட்டுள்ள பெறுமதியை அடையாளங்கண்டு சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஐ)	2019 ஆம் ஆண்டில் உப்பு போக்குவரத்திலிருந்து கிடைத்த வருமானத்தில் ரூபா 7,579,030 பணம் காணாமல் போயிருந்ததுடன் அப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய போக்குவரத்து வருமானமாகக் காட்டி முழுப் பெறுமதிக்காகவும் அறவிட முடியாக் கடனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் இந்த நிதி மோசடி சம்பந்தமாக நிதிக் கூற்றுக்களில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் உரிய பெறுமதியை அதனுடன் தொடர்புபட்ட பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வெளிப்படுத்துவதற்கு இணங்கிக்கொள்ளப்படுகின்றது.	நிதி மோசடி சம்பந்தமாக தெளிவாகவும் போதிய அளவிலும் வெளிப்படுத்துதல் நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட வேண்டியதுடன் முறைப்படியாக விசாரணைகளை நடாத்தி இதனுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடமிருந்து பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத மீதி

விடயம்		நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா	துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி ரூபா	வித்தியாசம் ரூபா	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	உயிரியல் சொத்துக்களின் கிரயம்	16,280,233	23,917,531	7,637,298	மூலதனமாக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் வெளி தனியார் கணக்காய்வு நிறுவனத்தினால் பதிவழிக்கப்பட்ட பெறுமதியாகும்.	உரிய மீதிகளின் வித்தியாசத்தை ஒப்பிட்டு உரிய சரிசெய்தல்கள்

						செய்யப்படுதல் வேண்டும்.
(ஆ)	உயிரியல் சொத்துக்களின் திரண்ட பெறுமானத் தேய்வு	2,092,375	9,729,673	7,637,298	மூலதனமாக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் வெளி தனியார் கணக்காய்வு நிறுவனத்தினால் பதிவழிக்கப்பட்ட பெறுமதியாகும்.	உரிய மீதிகளின் வித்தியாசத்தை ஒப்பிட்டு சரிசெய்தல்கள செய்யப்படுதல் வேண்டும்.
(இ)	16 ஊழியர்களுக்கு வழங்கிய இடர் மற்றும் விழா கடன் மீதிகள்	4,485,010	4,465,914	782,855	பதில் வழங்கப்படவில்லை.	உரிய மீதிகளின் வித்தியாசத்தை ஒப்பிட்டு சரிசெய்தல்கள செய்யப்படுதல் வேண்டும்.

1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

விடயம்	**தொகை ரூபா**	**வழங்கப்படாத கணக்காய்வு சான்று**	**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	1,693,182,851	நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் வருடாந்த மீளாய்வு அறிக்கை	சொத்துக்களின் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சொத்துக்கள் பதிவேடு Microsoft Excel கோவையாக பேணப்படுகின்றது.	நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை பேணுவதற்கும் அதனை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கும் வருடாந்தம் சொத்துக்களின் மீளாய்வினை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல வேண்டும்.

1.6 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
உள்நாட்டு கொள்வனவுகளுக்காக வழங்கிய முற்பணங்கள் உரிய செயற்பாடு நிறைவேற்றப்பட்ட உடன்	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்களுக்குரிய செயற்பாடு

தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 37 சந்தர்ப்பங்களின் போது தீர்த்துவைக்கப்படாத முற்பணங்களின் மொத்த பெறுமதி ரூபா 9,220,092 ஆகும்.		பூர்த்திசெய்யப்பட்ட உடன் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் முற்பணங்களை தீர்த்துவைக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறைப்படியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) 2006 பெறுகை வழிகாட்டிக் கோவை 4.2 ஆம் பந்தி	பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் விபரமான பெறுகை நடவடிக்கைகளை காட்டும் அங்கீகரித்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில் லை.	பதில் சமர்ப்பிக்கப்படவல்லை.	திட்டங்களை தயாரிக்காத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்வரும் காலங்களில் பெறுகைத் திட்டத்தை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை	நிறுவனத்தின் 19 வாகனங்களுக்கான எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படவில்லை.	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ) 2016 ஏப்ரல் 25 ஆந் திகதிய 2/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை	அரசாங்க கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகளின் ஊழியர் சம்பளங்களை திருத்தம் செய்வது தொடர்பாக அரசாங்க கம்பனிகளின் ஆளணியினர்களின் ஆட்சேர்ப்பு	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

நடைமுறைக்கு (SOR) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கம்பனி மேற்கூறிய கட்டகைளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 701,444,864 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 1,190,670,867 ஆகும். அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 489,226,003 குறைவு அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக விற்பனை வருமானம் குறைவடைதல் மற்றும் விற்பனை கிரயம் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களுக்குரிய போக்குப் பகுப்பாய்வு

இரண்டு ஆண்டுடன் ஒப்பிடும் போது விற்பனை 14 சதவீதத்தில் குறைவடைந்து விற்பனைக் கிரயம் 16 சதவீத்தால் அதிகரித்திருந்தது. இதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிறுவனத்தின் விற்பனை அலகுகளின் அளவு குறைவடைந்து அதற்கிணங்க வருமானம் குறைவடைந்திருந்தும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட விற்பனைக்கிரயம் அதிகரிப்பதற்கு Common Salt உற்பத்திக்குரிய நேரடிச் செலவு மற்றும் ஆளணிச் செலவு அதிகரித்தல் காரணமாக இருந்ததனால் நிறுவனத்தின் கிரய முகாமைத்துவம் சிறப்பற்ற நிலையில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

2.3 விகிதாசார பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறை விகிதம் 2.83 இலிருந்து 2.76 வரை சிறிய குறைவு காணப்பட்டிருந்தும் ஆகக்குறைந்த தேவைப்பாடு அடைந்து கொள்ளப்பட்டுள்ளது. விரைவுச் சொத்துக்கள் விகிதம் 2.17 இலிருந்து 2.40 வரையான சிறந்த மாற்றம் அவதானிக்கப்பட்டது. மொத்த இலாப விகிதம் 53 சதவீதத்திலிருந்து 37 சதவீதம் வரையும் தேறிய இலாப விகிதம் 30 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரையும் குறைவடைந்திருந்தது என அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக விற்பனை வருமானம் குறைவடைதல் உயிரியல் சொத்துக்களின் பெறுமானத் தேய்வு அதிகரித்தல் மற்றும் உற்பத்திக் கிரயம் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 அடையாளங்காணப்பட்ட நட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2024 பெப்ரவரி 21 ஆந் திகதியிலிருந்து 2024 மே 09 ஆந் திகதி வரை கார் ஒன்றுக்காக 20 சந்தர்ப்பங்களின் போது மொத்த பெறுமதி ரூபா 224,431 ஆன 605 லீற்றர் எரிபொருளினை பெற்றுக்கொள்வதற்கு	எரிபொருள் துஸ்பிரயோகம் இடம்பெற்றுள்து என இணங்கி கொள்ளப்படுகின்றது.	முறையான பரீட்சிப்புக்களை நடாத்தி உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும்

	எரிபொருள் கட்டளைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் நாளாந்த ஓட்ட அட்டவணையின் பிரகாரம் 12 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 133,888 மொத்த பொறுமதியான 361 லீற்றர் எரிபொருள் மாத்திரம் பதியப்பட்டிருந்தது. மிகுதி 08 சந்தர்ப்பங்களுக்கான கட்டளைகளைப் பத்திரம் ஒரு அலுவலக உதவியாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் எரிபொருள் பெற்றுக்கொள்ளாத 244 லீற்றர்களுக்காக ரூபா 90,543 செலுத்தப்பட்ருந்தது. மேலும் மீளாய்வாண்டின் ஏப்ரல் 24 ஆந் திகதி வழங்கப்பட்ட கட்டளைகளுக்காக ரூபா 11,872 ஆன 32 லீற்றர் எரிபொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது என விலைப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் மேற்கூறிய எரிபொருள் அளவானது வாகனத்திற்கு வழங்கப்படவில்லை.	தலைவரின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க கட்டளைகளுக்கான கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது எனவும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கிறேன்.	எரிபொருள் துஸ்பிரயோகத்தினால் இடம்பெற்ற நட்டத்தை உரிய தரப்பினர்களிடமிருந்து அறவிட்டு எரிபொருளை வழங்குவதற்குரிய உள்ளகக் கட்டப்பாட்டு முறைமையை முறைப்படியாக ஸ்தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	ஹைட் ரோலிக் எண்ணைக்காக (HD-68) உச்ச அளவு, ஆகக் குறைந்த அளவு மற்றும் பாதுகாப்பு இருப்பு மட்டங்கள் பேணப்படாமையால் 2024 யூன் 07 ஆந் திகதி ஹைட் ரோலிக் ஒயில் இல்லாமையால் மேசை உப்பு உற்பத்திப் பிரிவின் உற்பத்தி நடவடிக்கைளை் மேற்கொள்வதற்கு உதவியளிக்கின்ற இயந்திரம் செயற்படாமையால் அத்தினத்தில் கம்பனியால் இழக்கப்பட்ட உற்பத்திப் பெறுமதி ரூபா 811,617 ஆகும்.	மேசை உப்பு உற்பத்தி 12 மெட்ரிக் தொன் அளவில் இழக்கப்பட்டுள்ளது.	இருப்பு இல்லாததனால் இழக்கப்பட்ட உற்பத்திப் பெறுமதியை முறையான விசாரணைகளை நடாத்தி உரிய பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	கம்பனியால் முன்னைய ஆண்டிற்கான இலாபத்திலிருந்து முறையான அதிகாரமின்றி அரசாங்கத்தின் உரிமையை பிரதிநிதித்துவம் செய்கின்ற பணிப்பாளர் சபையின் 05 அங்கத்தவர்களுக்கு 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 625,000 ஊக்குவிப்பு படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.	05 பணிப்பாளர் சபை அங்கத்தவர்களில் மூன்று நபர்கள் ஊக்குவிப்பு படிப் பணத்தை மீளச் செலுத்தியுள்ளனர்.	பணிப்பாளர்களுக்குச் செலுத்தப்பட்ட தகமை இல்லாத ஊக்குவிப்பு படிகளின் எஞ்சியுள்ள மீதியை யும் துரிதமாக அறவீடு செய்தல் வேண்டும்.
(ஆ)	2024 மார்ச் 18 ஆந் திகதி உதவிப் பொது முகாமையாளர் உள்ளக கணக்காய்வு பதவிக்காக வழங்கப்பட்டிருந்த திருத்திய நியமனக் கடிதத்தின் பிரிவு இலக்கம் 10 இற்கு இணங்க கம்பனி உத்தியோகபூர்வ இல்லத்தினை வழங்குவதற்கான கடப்பாடு இல்லை எனவும் வழங்கப்படுமாகவிருந்தால் பொருளாதார வாடகை அறவிடப்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் முறையான	பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்டையில் எதிர்வரும் காலங்களில் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதனை நிதியற்ற பிரதிபலனாக கருதி தனிப்பட்ட வருமானவரி	நியமனக் கடிதத்தில் குறிப்பிட்ட பிரிவிற்கு இணங்க நடவடிக்கை எடுத்தலும் வாடகை மற்றும் முன்னர் செலுத்த வேண்டிய தனிப்பட்ட வருமான வரியினை அறவீடு செய்தலும்

	அங்கீகாரமின்றி 2023 ஒக்தோபர் 23 ஆந் திகதியிலிருந்து 2024 ஒக்தோபர் 14 ஆந் திகதி வரையான 355 நாட்கள் மஹலேவாய சுற்றுலா இல்லத்தில் தங்குமிட வசதியை பெற்றுக்கொண்டதன் அடிப்படையில் ஒரு நாளைக்கு ரூபா 2,500 வீதம் ரூபா 887,500 இந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய போதிலும் அது அறவிட்டப்பட்டிருக்காததுடன் இந்த நிதியற்ற பிரதிபலன் அடிப்படையில் முன்னர் செலுத்த வேண்டிய தனிநபர் வருமானவரியும் (Advance Personal Income Tax - APIT) அறவிடப்பட்டிருக்கவில்லை. 2024 திசெம்பர் மாதத்தின் போது உத்தியோகத்தருக்கு உத்தியோகபூர்வ இல்லம் வழங்கப்பட்டிருந்தும் அதனை பொறுப்பேற்கவில்லை எனவும் மேலும் அவதானிக்கப்பட்டது.	கணிப்பீட்டிற்கு எடுத்துக் கொள்ள முடியாது எனவும் தெரிவிக்கிறேன்.	செய்யப்படுதல் வேண்டும்.
(இ)	1994 ஆம் ஆண்டின் போது நில வாடகையை செலுத்தும் அடிப்படையில் 30 ஆண்டுகளுக்காக ஹம்பாந்தோட்டை பிரதேச செயலகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மஹலேவாய மற்றும் கொஹொலங்கல காணிக்கான வாடகை உடன்படிக்கை மீளாய்வாண்டின் போது முடிவடைந்திருந்ததுடன் அந்த உடன்படிக்கையின் செல்லுபடியாகும் கால எல்லை முடிவடைவதற்கு முன்னர் உடன்படிக்கைகளை நாளதுவரையாக்கி கொள்வதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்காததனால் மேற்கூறிய காணியை உற்பத்தி நடவடிக்கைகளுக்காக எடுத்துக்கொள்ளும் போது சில ஆபத்தான நிலைமை உருவாகலாம் என அவதானிக்கப்பட்டது.	பதில் வழங்கப்படவில்லை.	உடன்படிக்கையை நாளதுவரையாக்கிக் கொள்வதற்கு உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	கம்பனியால் முன்னைய 05 ஆண்டுகள் காலத்தில் நட்டங்களை அறிக்கையிடுவதற்கு நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில்லை.	நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டினை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	நிறுவனத்தினால் மீளாய்வாண்டின் போது ரூபா 5,852,800 பெறுமதியான 06 நீர் பம்பிகளையும் நீர் மோட்டார்களையும் கொள்வனவு செய்த போது தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்புக்களில்	பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருந்தும் குறைபாடுகள் இடம்பெற்றிருக்கலாம் எனவும்	இக்கொள்வனவு தொடர்பாக முறையான விசாரணைகளை மேற்கொள்ளுவதற்கும் நிர்ணயிக்கப்பட்ட

	உள்ளடக்கப்படாத நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு கேள்வி மதிப்பீட்டினை மேற்கொண்டு ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். தெரிவுசெய்யப்பட்ட வழங்குனரின் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்காக பதிவுசெய்தலினை உறுதிப்படுத்திக் கொள்ளாது ரூபா 892,800 பெறுமதி சேர்க்கப்பட்ட வரித் தொகையையும் உள்ளடக்கி கொள்வனவு கட்டளை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2006 ஆம் ஆண்டிற்கான அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்படாதும் முற்பண முறிகள் மற்றும் செயலாற்றல் முறிகள் பெற்றுக்கொள்ளப்படாதும் ஒப்பந்த பெறுமதியில் (VAT உள்ளடங்கலாக) 40 சதவீதம் அல்லது ரூபா 2,341,120 முற்பணம் வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தது. வழங்குனரினால் கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள பொருள் விபரக்குறிப்புக்கு இணங்கி காணப்படுகின்றதா என்பதனை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உறுதிப்படுத்தியிருக்கவில்லை. அப்பொருட்கள் தொடர்பாக பட்டய இயந்திர பொறியியலாளரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரீட்சிப்பின் போது பொருட்களின் வியாபாரக் குறி ஐக்கிய இராட்சியமாக (UK) குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவை சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சார மோட்டார் மற்றும் நீர்ப்பம்பி எனவும் வழங்கப்பட்ட பொருட்களுக்கு மத்தியில் 04 மோட்டார்களும் 06 பம்பிகளும் புதியவை என்பதாக வழங்குனர் குறிப்பிட்டிருந்தும் வழங்கிய 04 மோட்டார்களும் இதற்கு முன்னர் பயன்படுத்தப்பட்டு மீளப் பயன்படுத்துவதற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்பட்டவை எனவும் முன்னர் பயன்படுத்தப்பட்ட நீர் பம்பிக்கு மீண்டும் நிறம் பூசப்பட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது.	நிறுவனத்திற்கு பொருத்தமான பம்பியாக SPP பம்பி பயன்படுத்தப்பட்டுள்ளதனால் அந்த பொருள் விபரக்குறிப்புக்கள் பெறுகை அறிவுறுத்தலில் குறிப்பிடப்படவில்லை எனவும் வழங்குனருக்கு கொடுப்பனவு செய்ய உள்ள பணத்தில் மிகையாக செலுத்திய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சேவைகளை வழங்குவதற்கு தவறவிடப்படுமாயின் இடம்பெற்றுள்ள நட்டத்தை அறவீடு செய்வதற்கும் நீர்ப்பம்பிகளுக்காக காணப்பட்ட அவசர தேவைப்பாட்டின் அடிப்படையில் உடன்படிக்கைகளில் கையொப்பமிடுவதற்கு முன்னர் முற்பணம் செலுத்தப்பட்டது எனவும் தெரிவிக்கிறேன்.	பொருள் விபரக் குறிப்பினை தயாரிக்காது அதனை மதிப்பீடு செய்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவர்களை இது தொடர்பான பொறுப்புக்கு உட்படுத்தி தேவையான பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கும் முறையான தொழில்சார் கவனம் இல்லாது நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக செயற்பட்டு நட்டத்தினை பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் ஏப்ரல் மாதத்திலிருந்து செப்தெம்பர் மாதம் வரையான 06 மாத காலத்திற்காகப் பயன்படுத்துவதற்கு கம்பனியால் 1 கிலோ கிராம் கட்டி உப்புக்களின் 500,000 பொதிகள் ரூபா 3,103,400 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. பொதி செய்யும் பொருட்கள் தேவைப்பாட்டிற்கு இணங்க	பதில் வழங்கப்படவில்லை.	இக்கொள்வனவு தொடர்பாக முழுமையான மற்றும் வெளிப்படைத் தன்மையான விசாரணைகளை மேற்கொண்டு முறையான

	பெறுகை செய்யப்பட வேண்டிய பொருட்கள் மற்றும் அவற்றின் அளவு பெறுகைப் பிரிவினால் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக கொள்வனவு செய்யப்பட வேண்டிய அளவு 500,000 ஆக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தீர்மானித்திருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கொள்வனவு செய்யப்பட வேண்டிய அளவினைத் தீர்மானிக்கும் போது அச்சந்தர்ப்பத்தில் புந்தல லேவாயில் இருந்த பொதி செய்த பக்கட்டுக்களின் அலகுகள் 409,170 இனை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாதிருந்ததுடன் அதில் சிரேஷ்ட உற்பத்தி முகாமையாளரால் 2024 ஏப்ரல் 01 ஆந் திகதி பொதிசெய்த அலகுகளின் மீதி பூச்சிய மட்டத்தில் காணப்படுகின்றது எனத் தெரிவித்து 500,000 அலகுகளுக்கான தேவைப்பாட்டினைக் காட்டி இன்வென்டரி அட்டையும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2024 ஏப்ரல் மாத்திலிருந்து செப்தெம்பர் மாதம் வரையான 06 மாத கால எல்லைக்குள் 1 கிலோ கிராம் சங்ஸ்தா கட்டி உப்பு பக்கட் விற்பனைக்காக பொதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் எதிர்பார்த்தவாறு விறபனைகள் இடம்பெற்றிருக்காததனால் 2024 ஆகஸ்ட் 09 ஆந் திகதியிலும் கம்பனியிடம் மொத்தமாக 7,919,052 ஆன 1 கிலோ கிராம் கட்டி உப்பு பொதிகளின் 1,068,985 அலகுகள் விளைவற்றுக் காணப்பட்டன என அவதானிக்கப்பட்டது.		கவனத்தோடு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக பொருத்தமான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கம்பனிக்கு ஏற்பட்ட நட்டத்தை அவர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும்.
(இ)	2022 யூன் 30 ஆந் திகதி 20 கிலோ அச்சிடப்பட்ட வெளி உறைகளின் 150,000 அலகுகளை கொள்வனவு செய்வதற்குரிய பெறுகைகளின் போது ரூபா 5,175,000 மொத்த பெறுமதியான பொருட்கள் 03 சந்தர்ப்பங்களின் போது களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தன. வழங்கல்களை மேற்கொண்ட மூன்றாவது சந்தர்ப்பத்தின் போது கம்பனி வேண்டிக் கொண்ட அளவினை மிகைத்து வெளி உறைகளின் 44,540 அலகுகளை உள்ளடக்கி ரூபா 4,129,132 பெறுமதியான 119,685 அலகு உறைகள் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்ததுடன் அந்த இருப்பும் தரப் பரிசோதனை அறிக்கைக்கு இணங்க நிராகரிக்கப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 27 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் 472.22 ஆம் இலக்க	பதில் வழங்கப்படவில்லை.	இக்கொள்வனவு தொடர்பாக முழுமையான மற்றும் வெளிப்படைத் தன்மையான விசாரணைகளை மேற்கொண்டு முறையான கவனத்தோடு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக பொருத்தமான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கம்பனிக்கு ஏற்பட்ட நட்டத்தை அவர்களிடமிருந்து

கூட்டத்தீர்மானத்திற்கு இணங்க பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற கொள்வனவு கட்டளை இல்லாது 44,540 அலகுகளை மிகையாக பொறுப்பேற்ற உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தும் அந்த தீர்மானத்தை பின்பற்றாது மிகை வழங்கல்களுக்காக GRN இனை வழங்குவதற்கு தலைவரினால் களஞ்சிய பொறுப்பாளருக்கு 2024 பெப்ரவரி 19 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வு பரீட்சிப்பினை மேற்கொண்ட 2024 ஒக்தோபர் 25 ஆந் திகதி வரையும் மிகையாக பெற்ற இருப்பு பயன்படுத்தப்படாதிருந்ததுடன் அது 01 ஆண்டு 08 மாதங்களுக்கு அண்மித்த காலம் விளைவற்றுக் காணப்பட்டது. அவ்வாறே பெறுகை மேற்கொண்ட 2022 யூன் மாதம் இருப்பின் அலகு ஒன்றின் விலை ரூபா 34.50 ஆக இருந்ததுடன் 2023 ஆகஸ்ட் மாதமளவில் ஒரு அலகு விலை ரூபா 19.24 ஆக இருந்ததனால் இருப்பு தேவைப்பாட்டினை மிகைத்து கொள்வனவு செய்ததன் மூலம் ஒரு அலகுக்கு ரூபா 15.26 வீதம் மிகைக் கொடுப்பனவுகளுக்காக ரூபா 1,826,393 நட்டம் கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது.		அறவீடு செய்தல் வேண்டும்.

3.4 ஒப்பந்த நிருவாகம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2023 ஆம் ஆண்டின் போது நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த வெளிக்களப் பிரிவு தென்னை ஓலைகளை சேகரிக்கின்ற களஞ்சியத்தினை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட சிவில் வேலைகளின் பெறுமதி ரூபா 1,368,675 ஆக இருந்த போதிலும் அதற்கு வேலையாட்கள கிரயம் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் யூன் மாதம் மேற்கூறிய நிர்மாண வேலைகளுக்காக ரூபா 2,475,586 செலவு செய்து முடிவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மதிப்பீட்டினைத் தயாரித்தல் முறைப்டியாக மேற்கொள்ளப்படாமையும் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்வதற்காக இலக்கிடப்பட்ட திகதிகள் வழங்கப்படாமை	பதில் வழங்கப்படவில்லை.	மதிப்பீடு செய்தலினை முறையான தொழில்சார் கவனத்துடன் செய்வதற்கும் அவ்வாறு செய்யாத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் இது சம்பந்தாமாக உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மற்றும் முழுக்கிரயத்தினை மிகைத்து ரூபா 1,106,911 செலவு செய்யப்பட்டிருந்தமை என்பவற்றினால் நிர்மாண வேலைகளுக்காக ஸ்தாபிக்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடும் மேற்பார்வையும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.